வேலூரில் பிச்சைக்காரர் இல்லம்.

*216. வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்த ஆண்டில் வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் ஒரு தொழுநோய் பிச்சைக்காரர் இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை, எனினும் வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை-வேலூர் சாலையில்; திருவண்ணாமலையிலிருந்து சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இடத்தில், தொழுநோய் பிச்சைக்காரர் இல்லம், அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே காப்பாடியில் உள்ள தொழுநோய் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது குறித்து அரசுக்குத் தகவல் தெரியவில்லை.

திரு. கே. எ. வகாப் : தமிழகத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில்தான் அதிகமான தொழுநோய்க்காரர்கள் இருக்கிறார்கள் என்பதனால் அங்கே ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வட ஆற்காட்டைக் காட்டிலும் தர்மபுரியில்தான் அதிகம் என்று சொல்லப்படுகிறது. இப்போது அதற்கு திருவண்ணாமலைப் பகுதியில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : இந்தத் தொழுநோய் விடுதி ஒன்றை தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதற்கு திருச்சியில் இருந்து தஞ்சை போகிற வழியில் ஓரிடம் எடுக்கப்பட்டிருக்கிறது. அது தஞ்சையில் சேரும்.

Ryots of Inam Estates

*217 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that 500 Inam Ryots in Pudukottai went on hunger strike on 22nd March 1972 in front of Revenue Divisional Officer, Pudukottai Office;

(*b*) if so, the reasons therefor; and

(c) the steps taken by the Government to meet their demands?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஏறத்தாழ 250 வேளாண்மைத் தொழிலாளர்கள் 22—3—72-ல் முழக்கங்களை எழுப்பிக் கொண்டு ஊர்வலமாகச் சென்று புதுக்கோட்டை மாவட்டத் துணை ஆட்சித் தலைவரது அலுவலகம் முன்பாகக் கூடி நண்பகல் 12 மணியிலிருந்து மாலை 4-35 மணி வரை அடையாள உண்ணா நோன்பு இருந்தனர். அவர்களது கோரிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(இ) (1) நிலவரி ஏற்பாட்டு வேலைகள், உயர்நீதி மன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்ட போதிலும், அவ் வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக அவசரச் சட்டம் ஒன்றைச் சாற்றுரைத்தும், தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (கையகப்படுத்துதல்—ரயத்துவாரி யாக மாற்றுதல்) சட்டத்தையும் (26/1963), தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (கையகப்படுத்துதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தையும் (30/1963) தக்கவாறு திருத்தியும் இவ்வேலைகள் உடனடியாக முடிக்கப் பெறுதல் வேண்டும்.

(2) சிவில் நீதிமன்ற ஆணைகளின்படிக்கான கைது, ஜப்தி நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட வேண்டும்.

(உ) சிவில் ஏற்பாட்டு வேலைகள் உயர்நீதி மன்றம் நிறுத்திவைத் துள்ளதால் இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது. இவ்வழக்கு குறித்து உயர்நீதி மன்றம் முடிவு எடுக்கும் வரையில், நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்று ஸ்டே ஆர்டர்கள் இருந்தாலும்கூட செட்டில்மெண்டு செய்வதற்கான விசாரணையைத் தொடர்ந்து நடத்தவும், பட்டா விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் அரசு முன் வருமா ? இனாம் திருத்தச் சட்டம் கொண்டுவரப் போவதாகச் சொன்னார்கள். ஆகவே அப்படிச் சட்டம் கொண்டுவருவதற்கு முன்னாலே இது போன்ற நடவடிக்கையை எடுக்கக் கூடாதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மைனர் இனாம்ஸ் 361 இருக்கிறது என்றால் 340-க்கு செட்டில்மெண்டு முடிந்துவிட்டது. 21-க்குத்தான் நடக்க வேண்டியிருக்கிறது. அவ்வளவும் ஸ்டேயில் இல்லை. 31—8—1972-க்குள் பாக்கியுள்ளது முடிந்துவிடும். இனாம் எஸ்ட்டேட்ஸ் என்று எடுத்துக்கொண் டால் 198 இல் 133-க்கு செட்டில்மெண்டு முடிந்துவிட்டது. பாக்கியுள்ள 59

இல் 44 தான் ஸ்டேயில் இருக்கிறது. மிச்சம் உள்ள 15-ம் சீக்கிரத்தில் முடிந்து விடும். இதுபற்றி அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறது என்று தெரிவித்தேன். நீதிமன்றத் திர்ப்பு வந்ததற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஹைக் கோர்ட், சுப்ரீம் கோர்டிலே இருக்கும் கேஸ்களை துரிதப்படுத்துவதற்கு, துரிதமாக அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோர்ட்டுகளுக்கு அரசாங்கம் ஏதாவது மனு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தாமதப்படுத்த வேண்டும் என்பது அரசின் நோக்கம் அல்ல. எவ்வளவு விரைவுபடுத்த முடியுமோ அவ்வளவு விரைவுபடுத்த வேண்டுமென்று வழக்கறிஞர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

கேளிக்கை வரிகள்

* 218. வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கிண்டியில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தின் மூலமாக 1970-1971, 1971-1972 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு அரசுக்கு முறையே கிடைத்த வருமானம் எவ்வளவு?

(இ) அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை அதிகப்படுத்திட அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) சென்னை கிண்டியில் நடை பெறும் குதிரைப் பந்தயத்தின் மூலமாக 1970-71, 1971-72 ஆகிய ஆண்டுகளில் தமிழக அரசுக்குக் கீழ்க்கண்டவாறு வருமானம் கிடைத்துள்ளது:—

பந்தய வரி—

1970-71-ம் ஆண்டு 178.46 இலட்சம் ரூபாய்.

1971-72-ம் ஆண்டு 199.46 இலட்சம் ரூபாய்.

கேளிக்கை வரி—

1970-71-ம் ஆண்டு 10.91 இலட்சம் ரூபாய்.

1971-72-ம் ஆண்டு 14.28 இலட்சம் ரூபாய்.

மொத்தம்.—

1970-71-ம் ஆண்டு 189.37 இலட்சம் ரூபாய்.

1971-72-ம் ஆண்டு 213.74 இலட்சம் ரூபாய்.